வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை 22-4-2010 வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 22-4-2010, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 22-4-2010 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-4-2010) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

62. மானியக் கோரிக்கை எண் 44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

63. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

64. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய "மக்கள் சாசனம்" 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

66. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

67. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2010-2011. (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS